ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப்பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2238/35 - 2021 ජූලි මස 30 වැනි සිකුරාදා - 2021.07.30

*2238/35 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV(ஆ) - உள்ளூராட்சி

### உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**வடமேல் மாகாண மாகாண சபை**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம்*

*1987 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவினால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, வடமேல் மாகாணத்தின் ஆளுநர் ராஜா கொல்லுரே ஆகிய என்னால் அமைக்கப்பட்ட கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள கட்டளை இத்தால் பிரசித்தப்படுத்தப்படுகின்றது.*

**ராஜா கொல்லுரே,**
வடமேல் மாகாண ஆளுநர்.

குருநாகல்,
*2021, யூலை 29.*

1A - PG 5513 — 25 (2021/07)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**கட்டளை**

*கட்டளைகளது நோக்கம்.*

1. *1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டம் செயற்படுத்தப்பட்ட திகதி தொடக்கம் மூன்று ஆண்டுகளினுள் அதாவது, 1990 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆந் திகதிக்கு முன், உரிய பிரதேச சபைச் சட்டத்தின் 23 ஆம் பிரிவின்படி பிரதேச சபைக்கு உரித்தாகியுள்ளதாக கருதப்படுகின்ற வீதிகள் மற்றும் பாதைகள் பற்றி, 24 ஆம் பிரிவின் கீழ், உரிய வீதிகள் மற்றும் பாதைகளாக நிரந்தரக் குறி மற்றும் எல்லைப் புள்ளி இடலும் அவ்வீதிகள் மற்றும் பாதைகளின் திட்டங்கள் ஒழுங்கமைக்க வேண்டியிருந்ததனாலும், கட்டளைகளில் விதிக்கப்பட்டுள்ளவாறு அறிவித்தல் விளம்பரப்படுத்த வேண்டும் என்று விதிக்கப்பட்டிருந்தாலும், இதுவரையிலும் அதற்குத் தேவையான கட்டளைகளை ஒழுங்கமைக்கப்படாததனாலும் மற்றும் அவ்வாறு அறிவித்தல் விளம்பரப்படுத்த வேண்டிய காலம் தற்போது காலக்கெடு முடிந்ததனாலும், இங்கு விசேட சந்தர்ப்பமான விடயத்தினை கவனத்தில் கொண்டு பிரதேச சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின்படி நடவடிக்கை மேற்கொள்வதற்கு வடமேல் மாகாணத்தின் பிரதேச சபைகளுக்கு மேலதிக காலம் வழங்கி அனுமதி வழங்குவதற்கு மற்றும் உரிய வீதிகள் மற்றும் பாதைகளது பெயர்ப்பட்டியலினை இட்டு அறிவித்தலை விளம்பரப்படுத்துவதற்குத் தேவையான நடைமுறைகளை விதித்தலும் அது பற்றி அல்லது இடைநேர்விளைவான எல்லா விடயங்களுக்காகவும் ஏற்பாடுகளை வழங்குவதற்காக இக்கட்டளை அறிவிக்கப்படுகின்றது.*

*சுருக்கப் பெயர்.*

2. இக்கட்டளை வடமேல் மாகாணத்தின் பிரதேச சபைகளினால் கொண்டு நடாத்தப்படுகின்ற வீதிகள் மற்றும் பாதைகளின் திட்டத்தினை ஒழுங்கமைத்தல் மற்றும் பெயர்ப்பட்டியல்களை வெளியிட்டு விளம்பரங்களை வெளியிடுதல் பற்றிய கட்டளை என்று அறிமுகப்படுத்தப்படும்.

*சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் செயற் படுத்துவதற்குத் தேவையான காலத்தை நீடித்தல்.*

3. (1) *1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய இங்கு அதன் பிறகு "சட்டம்" என்று அறிமுகப்படுத்தப்படுகின்ற, 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்திற்கான பிரதேச சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவினால் கிடைக்கப்பட்டுள்ள அதிகாரப்படி, குறித்த பிரதேச சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழான செயற்பாட்டினை நிறைவேற்றுவதற்காக, இக்கட்டளை செயற்படுத்தப்படும் திகதி தொடக்கம் பன்னிரண்டு மாதங்கள் மேலதிக காலங்கள் வடமேல் மாகாணத்தின் பிரதேச சபைக்கு இத்துடன் அனுமதி வழங்கப்படுகின்றது.*

(2) *(1) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மேலும் அனுமதி வழங்கப்பட்ட பன்னிரண்டு மாத காலத்தினுள் அச்செயற்பாட்டை நிறைவேற்றி முடிப்பதற்கு இயலாது போகின்ற, இதன் பின்பு "சபை" என்று அறிமுகப்படுத்துகின்ற வடமேல் மாகாணத்தின் ஏதாவதொரு பிரதேச சபைக்கு, அதன் செயற்பாட்டை நிறைவேற்றி முடிப்பதற்காக மேலதிக காலம் தேவைப்படுமாயின் அதற்கான காரணமான விசேட சந்தர்ப்பங்களைச் சமர்ப்பித்து மேலும் மேலதிக காலத்திற்கு அனுமதியினைக் கோருவதற்கு பிரதேச சபைகளுக்கு முடியும்.*

*சட்டத்தில் 23 ஆம் பிரிவின் கீழ் எடுக்கப்படுகின்ற ஒழுங்கைகளை அடையாளம் காணுதல் மற்றும் உறுதிப்படுத்திக் கொள்ளல்.*

4. (1) *சட்டத்தின் 23 ஆம் பிரிவின் கீழ், சபைக்கு உரித்தாகியுள்ளதாக கருதப்படுகின்ற, இதன் பின்பு "பாதை" என்று அறிமுகப்படுத்தப்படுகின்ற வீதிகள் மற்றும் பாதைகளை அடையாளம் கண்டு, வடமேல் மாகாணத்தின் உள்ளூராட்சி ஆணையாளரினால் விதிக்கப்படுகின்ற படிவத்திற்கு அமைய ஒழுங்கமைத்து அவ்வீதிகள் மற்றும் பாதைகள் பற்றி பெயர்ப்பட்டியலை இதன் பிறகு "உதவி ஆணையாளர்" என்று அறிமுகப்படுத்துகின்ற, பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்குச் சமர்ப்பித்து அதற்கு அவரது இணக்கத்தைப் பெற்றுக்கொள்ளுதல் தலைவரது செயற்பாடாகும்.*

(2) *சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் சபைக்கு அளிக்கப்பட்டுள்ள அல்லது 17 ஆம் பிரிவின் கீழ், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு குருநாகல் மாவட்டத்தில் அல்லது புத்தளம் மாவட்டத்தில் அபிவிருத்திச் சபையினால் அளிக்கப்பட்ட நிலையான சொத்திற்கு உட்படுத்தப்பட்டுள்ள எல்லாப் பாதைகளும், இந்த உப அட்டவணைக்கு உட்படுத்துவதற்காக தலைவரினால் செயற்படுத்தப்பட வேண்டும்.*

(3) *(1) ஆம் உப பிரிவில் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் உள்ளடங்கிய பாதைகளுக்கு இடையே சபைக்கு உரித்தாக உள்ளதாக கருதுவதற்கு உதவி ஆணையாளரின் இணக்கம் கிடைக்கப்பெற்றுள்ள எல்லாப் பாதைகள் பற்றியும் அறிவித்தல் விடுத்தல் மற்றும் அதற்கு தொடர்புடைய அல்லது இடைநேர்விளைவான செயலைச் செய்தல் இதன் பின் காட்டப்படுகின்ற கட்டளைகளது நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.*

5. (1) உதவி ஆணையாளரது இணக்கம் கிடைத்த எல்லா பாதைகளுக்காகவும் இங்கு முதலாவது அட்டவணையின் மாதிரிக்கு அமைய அடையாளம் காண்பதற்கான குறியீட்டு இலக்கப்படி வேறுபடுத்தல் வேண்டும்.

*ஒவ்வொரு பாதைக்கும் உரித்தான தரவுகளை ஒன்று சேர்த்தல் மற்றும் பாதைகளை அடையாளம் காணும் குறியீடுகளாக ஒதுக்குதல்.*

(2) அடையாளம் காண்பதற்கான குறியீட்டு இலக்கம் ஒதுக்கப்பட்ட எல்லாப் பாதைகளும், கீழ்க் காணப்படும் தகவல்கள் மற்றும் அதற்குரிய புவியியல் ஒருங்கிணைப்புத் தரவுகளைச் சேகரித்துக் கொள்வதற்குத் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்வது தலைவரின் செயற்பாடாகும் :

(i) ஆரம்பிக்கும் இடம் தொடர்புபடுகின்ற வேறு ஏதாவதொரு பாதையின் பெயர் மற்றும் ஆரம்பிக்கும் இடத்தின் இடது மற்றும் வலது பக்க புவியியல் ஒருங்கிணைப்பு ;

(ii) குறித்த பாதைக்குத் தொடர்புபடுகின்ற வேறு ஏதாவதொரு பாதையில் இருந்து குறித்த பாதை விரிந்து செல்வதாயின் இடது பக்கத்திற்கா அல்லது வலது பக்கத்திற்கா என்பது பற்றி.

(iii) பாதையின் ஆரம்பத்தில் இருந்து எளிய நேர்க்கோடு வடிவில் வேறுபடுகின்ற எல்லா இடங்களும் உரிய பாதையின் இடது பக்கம் மற்றும் வலது பக்கம் புவியியல் ஒருங்கிணைப்பு ;

(iv) பாதை ஊடாக வடிந்தோடிச் செல்கின்ற ஆற்றிற்கு, கால்வாய்க்கு, நீரோடைக்கு அல்லது வேறு நீர்வழிப் பாதைக்கு மேலாக கட்டமைக்கப்பட்டுள்ளது பாலமா, மதகா, பெட்டி மதகா, நீர்வீழ்ச்சியா அல்லது நீர்க் கடவை போன்ற மற்றும் அவற்றின் அமைவினைக் காட்டுகின்ற புவியியல் ஒருங்கிணைப்பு ;

(v) பாதையின் பாதுகாப்பிற்காக கட்டமைக்கப்பட்டுள்ள ஏதாவ தொரு ஒரு பக்கச் சுவர் அல்லது வேறு சில ஆதரவுகள் இருக்குமாயின், அதன் ஆரம்ப இடத்தின் மற்றும் முடிவடையும் இடத்தின் புவியியல் ஒருங்கிணைப்பு ;

(vi) பாதை ஊடாக அமைக்கப்பட்டுள்ள வடிகால்வாய்களது ஆரம்ப இடத்தினதும் இறுதி இடத்தினதும் புவியியல் ஒருங்கிணைப்பு ;

(vii) பாதை ஊடாக அமைந்துள்ள மின் கம்பங்கள் இடையே, வீதி விளக்கு பொருத்தப்பட்டுள்ள மின் கம்பங்கள் மற்றும் அவ் இடங்களின் புவியியல் ஒருங்கிணைப்பு ;

(viii) ஆரம்ப இடத்தில் இருந்து முடிவடையும் இடம் வரை பாதையினை மேம்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள மேற்பகுதித் தளம் எது என்று மற்றும் அந்த மேற்பகுதித் தளம் ஒன்றிற்கு ஒன்று வேறுபடுகின்ற எல்லா இடங்களினதும் புவியியல் ஒருங்கிணைப்பு ;

(ix) பாதையின் நீளம் மீற்றர்களில் ;

(x) பாதையின் சாதாரண அகலம் மீற்றர்களில் ; மற்றும்

(xi) பாதையின் அகலம் வேறுபடுகின்ற எல்லா இடங்களினதும் இடது பக்க மற்றும் வலது பக்க புவியியல் ஒருங்கிணைப்பு

6. இக்கட்டளையின் கீழ் ஒழுங்கமைக்கப்படுகின்ற எல்லா ஆவணங்களும் மற்றும் திட்டங்களும் கந்தவல/ சிறீ லங்கா என்ற ஒருங்கிணைப்புக் கட்டமைப்பிற்கு உரித்தான புவியியல் ஒருங்கிணைப்பினைப் பயன்படுத்தி ஒழுங்கமைத்தல் வேண்டும்.

*கந்தவல/ஸ்ரீ லங்கா கட்டமைப்பினைப் பயன்படுத்த வேண்டும்.*

7. ஒவ்வொரு பாதைகள் பற்றியும் சேகரிக்கப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்தி இரண்டாவது அட்டவணையின் மாதிரிக்கு அமைய, எல்லாப் பாதையும் திட்டப்படி ஒழுங்கமைத்தல் தலைவரின் செயற்பாடாகும்.

*பாதைகளது திட்டத்தை ஒழுங்கமைத்தல்.*

*பாதைகள் பற்றிய ஆவணத்தை ஒழுங்கமைத்தல்.*

8. இங்கு மூன்றாவது அட்டவணையின் மாதிரிப் படிவத்திற்கு அமைய, உதவி ஆணையாளரது இணக்கத்துடன் எல்லாப் பாதைகள் பற்றிய தகவல் அடங்கிய ஆவணம் ஒன்றினை ஒழுங்கமைப்பதற்கு ஏற்பாடு செய்தல் தலைவரது செயற்பாடாகும். மூன்றாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தகவல்களுக்கு மேலதிகமாக ஏதாவதொரு தகவலினை உள்ளடங்குவதற்குச் சபைக்கு இயலுமை காணப்படுமாயின், உரிய மேலதிக தகவல்கள் அடங்குமாறு அட்டவணைக்கு பகுதிகளை ஒருங்கிணைக்க முடியும்.

*சபைக்குரிய பாதையாக ஏற்றுக்கொள்ளல், அதுபற்றி அறிவித்தல் பிரசுரிக்கப்பட வேண்டும் என்று மற்றும் அப்பாதையின் உரிமை பற்றி உரித்து சொல்கின்றவரின் செயற்பாடு.*

9. (1) சபைக்குரித்தான பாதைகளாகக் கருதப்பட வேண்டியது என்று உதவி ஆணையாளரின் இணக்கம் கிடைக்கப்பெற்ற பாதைகள் சபைக்குரிய பாதைகளாக ஏற்றுக்கொள்வதற்கு மற்றும் சட்டத்தின் 24 ஆம் பிரிவில் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அப்பாதைகளது பெயர்ப்பட்டியல் வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டும் என்றும் சபையின் முன்மொழிவினை அனுமதிக்கின்றதன் மூலம் தீர்மானித்தல் வேண்டும்.

(2) (1) ஆம் பந்தியின் கீழ் சபை தீர்மானம் எடுத்ததன் பின்பு, மூன்றாவது அட்டவணைக்கு இணங்க அப்பாதைகளது பெயர்ப்பட்டியல் வர்த்தமானியில் பிரசுரித்தல் தலைவரது செயற்பாடாகும்.

(3) வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்ற குறித்த அறிவித்தலில் உள்ளடங்கிய ஏதாவதொரு பாதையின் உட்பாடுகளின் கீழ் செயற்படுவதற்கு உரியவர்களுக்கு உரிமை இருத்தல் வேண்டும்.

*பாதை ஒன்றின் உரித்து பற்றி அளிக்கப்பட்டுள்ள வழக்கு பற்றிய ஆவணம் ஒன்றினைக் கொண்டு நடாத்தல்.*

10. (1) 9(2) ஆம் கட்டளையின் கீழான அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரித்த பின்னர், அவ்வாறான ஏதாவதொரு அறிவித்தலில் அடங்கிய ஏதாவதொரு பாதையின் உரிமை பற்றி குறித்த நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்கு பற்றிய தகவல்கள் அடங்கிய ஆவணம் ஒன்றினைக் கொண்டு நடாத்தல் தலைவரின் செயற்பாடாகும்.

(2) எவர் ஒருவரினால் குறித்த அறிவித்தலுக்கு உரித்தாக நீதிமன்றத்தினால் வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக அந்த நீதிமன்றத்தினால் சபைக்கு அறிவிக்கப்படுகின்ற நொதீசி கிடைக்கப்பெற்ற உடனே, அவ்வழக்கு பற்றிய தகவல் உரிய ஆவணத்தில் குறித்துக்கொள்வதற்கு மற்றும் உரிய வழக்கு பற்றிய இறுதித் தீர்மானத்திற்கு வழிவகுக்கும் நிகழ்வுகளின்படி காலத்திற்கு காலம் உரிய ஆவணத்தினை புதுப்பிப்பதற்கு ஏற்பாடு மேற்கொள்ளுதல் தலைவரது செயற்பாடாகும்.

*நீதிமன்றத்தின் இறுதித் தீர்மானம்படி தேவையான வேறுபடுத்தல் செய்ய வேண்டும்.*

11. (1) 9 ஆம் கட்டளையின் கீழ் அறிவித்தல் மூலம் குறிப்பாக கட்டளையிடப்பட்டுள்ள இறுதித் திகதிக்கு முன், அவ் அறிவித்தலில் உள்ளடங்கிய ஏதாவதொரு பாதை ஒன்றின் உரிமை பற்றி நீதிமன்றம் ஒன்றில் தொடரப்பட்டுள்ளதாக அந்நீதிமன்றத்தினால் சபைக்கு அறிவிக்கப்படுகின்ற நொதீசி கிடைத்த உடனே, அவ்வழற்கு பற்றிய தகவல்கள் குறித்த ஆவணத்தில் பதிந்து வைப்பதற்கு மற்றும் உரிய வழக்கு பற்றி இறுதித் தீர்மானத்தினை வரை நிகழ்வுகளின் காலத்திற்கு காலம் உரிய ஆவணத்தினைப் புதுப்பிப்பதற்கு ஏற்பாடு மேற்கொள்ளுதல் தலைவரது செயற்பாடாகும்.

*பாதைகளது உரிமையினை உறுதிப்படுத்தும் இறுதி அறிவித்தல் பிரசுரித்தல் வேண்டும்.*

12. (1) (அ) 11 ஆம் கட்டளையின் கீழ் தேவையான வேறுபாடுகள் செய்யப்பட்ட பாதைகள் ; மற்றும்

(ஆ) 9(2) ஆம் கட்டளையின் அறிவித்தலுக்கு அமைய வழக்குத் தொடரப்படாத பாதைகள், சபைக்கு உரித்தாக்கப்படுகின்ற பாதைகளாகக் கருத்தில் கொள்ள வேண்டும் என்று மற்றும் உரிய பாதைகள் பற்றிய ஆவணத்தினை வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டும் என்று முன்மொழிவு அனுமதியினைச் சபையினால் எடுக்கப்பட வேண்டும்.

(2) (1) ஆம் உப பிரிவின் கீழான முன்மொழிவினை அனுமதித்தல் மற்றும் அது பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரித்தல், 9 ஆம் கட்டளையின் கீழான அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட திகதி தொடக்கம் மூன்று மாதங்கள் முடிந்ததன் பின்பு மற்றும் ஆறு மாதங்கள் முடிவதற்குள் செயற்பட வேண்டும்.

(3) 9(2) ஆம் கட்டளையின் அறிவித்தலுக்கு அமைய குறித்த நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டிருந்த மற்றும் (2) ஆம் பந்தியின் கீழான அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டதன் பின்பு குறித்த நீதிமன்றத்தினால் இறுதித் தீர்மானம் வழங்கப்பட்டுள்ள ஏதாவதொரு பாதை பற்றி,

குறித்த இறுதித் தீர்மானத்தின் விதிப்படி சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு தேவையான வேறுபாடுகள் செய்து அது பற்றிய முன்மொழிவினை அனுமதித்துக் கொள்வதற்குச் சபையினால் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதுடன், அப்பாதைகள் அடங்கிய மேலதிக பெயர்ப்பட்டியல் அடங்கிய அறிவித்தல் ஒன்றினை வர்த்தமானியில் பிரசுரிப்பது தலைவரின் செயற்பாடாகும்.

13. (1) 12 ஆம் கட்டளையின் கீழ் வெளியிடப்பட்டுள்ள அறிவித்தலில் உள்ளடங்கிய எல்லாப் பாதைகளும் சபைக்குரித்தாக்கப்பட்ட பாதையாகக் கருதுவது சட்ட ரீதியாதல் வேண்டும்.

*சபைக்குரித்தாகி உள்ளதாகக் கருதப்படுகின்ற பாதைகள் மற்றும் ஏதாவதொரு பாதையின் முடிவு.*

(2) சபைக்குரியதாகக் கருதப்படும் ஏதாவதொரு பாதை, சட்டத்தின் 24 ஆம் பிரிவு மற்றும் இக்கட்டளையின் கீழ் பாதையாகப் பயன்படுத்துதல் முடிவடைகின்ற எச்சந்தர்ப்பத்திலும் 12 ஆம் கட்டளையின் கீழ் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலுக்கு திருத்தம் ஒன்றினைப் பிரசுரித்தல் தலைவர் அவர்களது செயற்பாடாகும்.

14. சபைக்கு உரித்தாக்கப்பட்டதாகக் கருதுகின்ற எல்லாப் பாதைகளுக்காகவும், அப்பாதை பற்றிய தகவல்ககள் உள்ளடங்கிய இலெக்ரோனிக் கோவை ஒன்று ஐந்தாம், ஏழாம் உப அட்டவணைக்கு இணங்க இலெக்ரோனிக் மென்பொருள் பிரதியில் பாதைகள் பற்றிய இன்வெடரியில் ஒழுங்கமைத்தல் மற்றும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப அதனை புதுப்பித்தல் தலைவரது செயற்பாடாகும்.

*பாதைகள் பற்றி கோவை ஒன்று மற்றும் இன்வென்டரி ஒன்றினைக் கொண்டு நடாத்தல் வேண்டும்.*

15. சொற்கள் பற்றி பொருள் தேவைப்பட்டால், இக்கட்டளைகளில்-

*சொற்கள் பற்றிய விளக்கம்.*

"பாதை" என்ற சொல்லுக்கு சட்டத்தில் 23 ஆம் பிரிவின் கீழ் சபைக்கு உரித்தானது என்று கருதுகின்ற பாதை, மாவத்தை, குறுக்கு மாவத்தை மற்றும் படிக்கட்டும் கருத வேண்டியதுடன், அவ்வாறான ஏதாவது பாதைக்கு, மாவத்தைக்கு, குறுக்கு மாவத்தைக்கு அல்லது படிக்கட்டுகளுக்குப் பாதுகாப்பாக ஏதாவதொரு பாலம், மதகு நீர் நிலை ஒரு பக்க சுவர் கட்டப்பட்ட அல்லது கட்டப்பட்ட வடிகால்வாய் ஒன்று அல்லது கடவுபாலம் (ஏதண்ட) இதற்கு உட்படுத்தப்பட்டுள்ளது என்று கருதப்பட வேண்டும்.

"பாதையின் மேற்பகுதித் தளம்" என்பது, குல் மற்றும் தார் கலந்து ஒன்றோடு இணைக்கப்பட்ட கல், கொன்கிறீட், எஸ்போல்ட் அல்லது கிரவல் இட்டு செய்யப்பட்ட அபிவிருத்தியாகும்.

"தலைவர்" என்பது, இக்கட்டளையின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற வடமேல் மாகாணத்தின் ஏதாவதொரு பிரதேச சபையின் தலைவராவார் என்று கருதப்படும்.

16. இக்கட்டளைகளில் சிங்களம் மற்றும் தமிழில் மொழிகளுக்கிடையே ஏதாவதொரு முரண்பாடுகள் ஏற்பட்டால், அப்போது சிங்கள மொழியே அதிகாரம் பெற வேண்டும்.

*முரண்பாடு ஏற்பட்டால் அப்போது சிங்கள மொழி அதிகாரம் பெறல்.*

**முதலாவது உப அட்டவணை**

5 (2) கட்டளை

பாதைக்காக குறியீட்டு இலக்கம் ஒதுக்குதல்

சபைக்குரித்தாக வேண்டியதாகக் கருதுகின்ற ஏதாவதொரு பாதை ஒன்றிற்காக ஒதுக்கப்படுகின்ற குறியீட்டு இலக்கத்திற்குக் கீழுள்ள விடயங்கள் உள்ளடங்க வேண்டும்.

குறியீடு : மாகாணம்/ பிரதேச சபை/ அடிப்பாதை/ உள்ளூராட்சி சபைக்குரிய பாதை/ குறுக்குப் பாதை

உதாரணம் - NWPKUPB 247 2/ 16

- மாகாணத்திற்காக ஒதுக்கப்படுகின்ற குறியீட்டிற்கு "NWP" என்று இடப்பட வேண்டும்.
- பிரதேச சபைக்காக ஒதுக்கப்படுகின்ற குறியீடு, உள்ளூராட்சி ஆணையாளரினால் வழங்கப்படுகின்ற ஆலோசனைப்படி ஒதுக்கிக்கொள்ள வேண்டும்.
- அடிப்படைப் பாதை என்று கருதுவது பாதை மேம்பாட்டு அதிகார சபை அல்லது மாகாணத்திற்குரிய பாதை மேம்பாட்டு அதிகார சபைக்கு உரிய பாதையாகும். அந்த ஏதாவதொரு நிறுவனத்தினால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் ஒன்றில் உரிய ஏதாவதொரு பாதை பற்றி உரிய பாதைக்கு ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ள இலக்கம் இதற்காக பயன்படுத்தலாம்.
- பாதையின் குறியீடு அடுத்த இலக்கமாக வேண்டியது அடிப்படைப் பாதையினால் பரவலாக செல்கின்ற பாதைத் தொடராக ஒதுக்கப்படுகின்ற இலக்கமாதல் வேண்டும். இவ் இலக்கம் இரண்டு இலக்கத்தினால் உள்ளடங்க வேண்டும்.
- இங்கு "குறுக்குப் பாதை" என்று கருதுவது, உள்ளூராட்சி சபைக்கு உரிய ஏதாவதொரு பாதையில் ஆரம்பித்து பரவலாகின்ற குறுக்குப் பாதையாகும். அவ்வாறான குறுக்குப் பாதையானபோது இந்தக் குறியீட்டில் இறுதி இலக்கம் இரண்டிற்கு ஒரு இலக்கமாக விதிக்கப்பட வேண்டும். குறுக்குப் பாதை அல்லாத போது உள்ளூராட்சி சபைக்குரிய பாதையாகும் போது இந்த இறுதி இலக்கம் இரண்டும்"00" ஆதல் வேண்டும்.

**இரண்டாவது உப அட்டவணை**

*6 (1) கட்டளை*

*பாதைத் திட்டம்*

*பாதையின் குறியீடு* *பாதையின் பெயர்* *வடக்கு*

*சின்னம்*

| | | |
|---|---|---|
| *ஒருங் கிணைப் புகள் (கந்தவல/ ஶ்ரீ லங்கா ஒருங் கிணைப் புகளில்* | *பாதையின் வரைபடம்* | *சரித்திரம்* |

*அட்டவணை*

| | |
|---|---|
| *அளவு* | *ஆதாரம் :*<br>*வடிவமைத்தவர் :*<br>*திகதி :* |

*ஒருங்கிணைப்புகள் (கந்தவல/ஶ்ரீ லங்கா ஒருங்கிணைப்புகளில்)*

| தொடர் இலக்கம் | பாதையின் இலக்கம் | பாதையின் பெயர் (இருக்குமாயின்) | ஆரம்ப ஒருங்கிணைப்பு (கந்தவல ஸ்ரீ லங்கா) | | இறுதி ஒருங்கிணைப்பு (கந்தவல ஸ்ரீ லங்கா) | | பாதையின் நீளம் (மீற்றர்) | பாதையின் சாதாரண அகலம் (மீற்றர்) | எல்லை ஒருங்கிணைப்பு (கந்தவல ஸ்ரீ லங்கா) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | இடது | வலது | இடது | வலது | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

08-131